**<u>அவசரக்கூட்டம்</u>**

கூத்தாநல்லூர் நகராட்சியின் 2019ம் ஆண்டு நவம்பர் மாதம் 20ம் நாள் புதன்கிழமை காலை 11.30 மணிக்கு நடைபெற்ற அவசரக்கூட்ட நடவடிக்கைகள்

| மன்றக்கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|
| 20.11.2019 | **<u>பொருள் எண் 1</u>** இந்நகராட்சி அலுவலக உபயோகத்திற்கு 12A டோனர்கள் 25 எண்ணம், 88A டோனர்கள் 10 எண்ணம், Brother Printer Doner 2 Nos, Brother Doner Dram – 1 Nos, Datmatrix Printer riboon – 20 Nos சப்ளை செய்யும் பணிக்கு 30.10.2019 தேதி அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது. | **தீர்மானம் எண்:- 608** **அனுமதிக்கப்பட்டது** |

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | பொருட்களின் பெயர் | ஒப்பந்தபுள்ளி தொகை |
|---|---|---|---|
| 1 | காஸ்மிக் பாயிண்ட் கம்யூட்டர்ஸ் தஞ்சாவூர் | Libi 12A Toner Cartridge 1 No | 2900 |
| | | Lipi 88A toner Cartridge 1 No | 2800 |
| | | Brother TN 2365 Toner 1 No | 2425 |
| | | Brother TN 235 Drum kit 1 No | 2530 |
| | | Epson LQ310 ribbon cartiridge | 325 |
| | | 12.7x10 M<trs Printer ribbon 1 No | 75 |
| | | Epson 673 70 Mt ink bottle black, cyan, magnta, yello, Light eyan and light magenta 6 Nos | 3900 |
| | | Epson 673 70 Mt ink bottle black, cyan, magnta, yello, Light eyan and light magenta each | 650 |
| 2 | ஒபேல் சிஸ்டம்ஸ் சிவாஜி நகர் தஞ்சாவூர் | Libi 12A Toner Cartridge 1 No | 3075 |
| | | Lipi 88A toner Cartridge 1 No | 2975 |
| | | Brother TN 2365 Toner 1 No | 2750 |
| | | Brother TN 235 Drum kit 1 No | 2940 |
| | | Epson LQ310 ribbon cartiridge | 345 |
| | | 12.7x10 M<trs Printer ribbon 1 No | 90 |
| | | Epson 673 70 Mt ink bottle black, cyan, magnta, yello, Light eyan and light magenta 6 Nos | 4200 |
| | | Epson 673 70 Mt ink bottle black, cyan, magnta, yello, Light eyan and light magenta each | 700 |

<table>
<tr>
<td></td>
<td>மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள காஸ்மிக் பாயிண்ட் கம்யூட்டர்ஸ் தஞ்சாவூர் என்ற நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி தொகை குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>குறைவான ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>(ந.க.எண். /2019/இ1)</td>
<td></td>
</tr>
<tr>
<td>20.11.2019</td>
<td><u>பொருள் எண் 2</u><br>இந்நகராட்சி பகுதியில் உள்ள தெருக்களில் களைக்கொல்லி மருந்து தெளிக்கும் பணிக்கு 15.10.2019 தேதி அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்த தொகை</th><th>ஒப்பந்தபுள்ளி தொகை</th></tr>
<tr><td>1</td><td>ஆர்.செந்தில் ஒப்பந்ததாரர் கொரடாச்சேரி</td><td rowspan="2">1,00,000</td><td>99,900</td></tr>
<tr><td>2</td><td>திரு.இளமாறன் ஒப்பந்ததாரர் கொரடாச்சேரி</td><td>99,990</td></tr>
</table>
மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள திரு. ஆர்.செந்தில் ஒப்பந்ததாரர் கொரடாச்சேரி என்பவரிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி தொகை குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>குறைவான ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>(ந.க.எண். 935/2019/எச்1)</td>
<td>தீர்மானம் எண்:- 609<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>20.11.2019</td>
<td>

<u>**பொருள் எண் 3**</u>

இந்நகராட்சிக்குட்பட்ட 12 வது வார்டு அவ்வை காலனியிலுள்ள சுகாதார மையத்தில் இயங்கி வந்த 1 HP Motor புதிதாக பொருத்தும் பணிக்கு 19.11.2019 தேதி அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தபுள்ளி தொகை</th></tr>
<tr><td>1</td><td>திரு.எம்.உதயகுமார் ஒப்பந்ததாரர் லெட்சுமாங்குடி</td><td>25410</td></tr>
<tr><td>2</td><td>திரு.வி.எழில்மாறன் ஒப்பந்ததாரர் லெட்சுமாங்குடி</td><td>25460</td></tr>
</table>

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள திரு. எம்.உதயகுமார் ஒப்பந்ததாரர் லெட்சுமாங்குடி என்பவரிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி தொகை குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

குறைவான ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண். /2019/இ1)

</td>
<td>

**தீர்மானம் எண்:- 610**

**அனுமதிக்கப்பட்டது**

</td>
</tr>
<tr>
<td>20.11.2019</td>
<td>

**பொருள் எண் 4**

இந்நகராட்சிக்குட்பட்ட 6 வது வார்டு புளியங்குடியிலுள்ள சுகாதார மையத்தில் இயங்கி வந்த 1 HP Motor புதிதாக பொருத்தும் பணிக்கு 19.11.2019 தேதி அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தபுள்ளி தொகை</th></tr>
<tr><td>1</td><td>திரு.வி.எழில்மாறன் ஒப்பந்ததாரர் லெட்சுமாங்குடி</td><td>29800</td></tr>
<tr><td>2</td><td>திரு.பி.செந்தில்நாதன் ஒப்பந்ததாரர் லெட்சுமாங்குடி</td><td>30000</td></tr>
</table>

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள திரு. வீ.எழில்மாறன் ஒப்பந்ததாரர் லெட்சுமாங்குடி என்பவரிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி தொகை குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

குறைவான ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண். /2019/இ1)

</td>
<td>

**தீர்மானம் எண்:- 611**

**அனுமதிக்கப்பட்டது**

</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>20.11.2019</td>
<td>

**<u>பொருள் எண் 5</u>**

இந்நகராட்சியில் பொதுபிரிவில் இயங்கி வரும் TN 50 U 2453 ஈப்பு வாகனத்திற்கு புதியதாக பேட்டரி வாங்கி பொருத்தும் பணிக்கு கோரப்பட்ட விலைப்புள்ளியில் கீழ்கண்ட விலைப்புள்ளிதாரர்களிடமிருந்து மூன்று விலைப்புள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | விலைப்புள்ளிதாரர் பெயர் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | தமிழ் பேட்டரி ஒர்க்ஸ் & ஆட்டோ எலக்ட்ரிக்கல்ஸ் திருவாரூர் | 7100 |
| 2 | G.K. ஆட்டோ எலக்ட்ரிக்கல்ஸ் & பேட்டரி ஒர்க்ஸ் திருவாரூர் | 7150 |
| 3 | சாரதி பேட்டரி ஒர்க்ஸ் திருவாரூர் | 7250 |

மேற்கண்டவாறு பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள தமிழ் பேட்டரி ஒர்க்ஸ் & ஆட்டோ எலக்ட்ரிக்கல்ஸ் திருவாரூர் என்பவரிடமிருந்து வரப்பெற்ற விலைப்புள்ளி தொகை குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

குறைவான விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண். /2019/இ1)

</td>
<td>

**தீர்மானம் எண்:- 612**

**அனுமதிக்கப்பட்டது**

</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 20.11.2019 | **<u>பொருள் எண் 6</u>**<br>சொத்துவரியினை 01.04.2018 முதல் சீராய்வு செய்திட வெளியிடப்பட்ட அரசாணை எண் 73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 19.07.2018 மற்றும் அரசாணை எண் 76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 26.07.2018 ஆகியவைகளை நிறுத்தி வைத்து, சொத்துவரி சீராய்விற்கு முந்தைய சொத்து வரியினையே வசூலித்திடவும் சொத்துவரி சீராய்வு குறித்து அரசு செயலாளர் நிதித்துறை அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள குழுவின் பரிந்துரையின்பேரில் அரசினரால் சொத்துவரி சீராய்வு குறித்து முடிவு செய்யப்படும் என வெளியிடப்பட்ட அரசாணை எண் 150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA-IV) துறை நாள் 19.11.2019 மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் பதிவு செய்யலாம்<br>2. நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 20.11.2019 ஆம் தேதிய சுற்றறிக்கை ந.க.எண். 40032/2012/ஆர்1ல் குறிப்பிட்டவாறு சொத்துவரி மண்டலங்கள் பகுப்பாய்வு (Zone rate) மற்றும் 2017-2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சொத்துவரி மறு அளவீடுகள் (Under Assessed and Buildings with Changes in usage) ஆகியவைகளையும் நிறுத்தி வைத்திட தெரிவிக்கப்பட்டுள்ளதையும் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.<br>(ந.க.எண்.1105/2018/அ1) | **தீர்மானம் எண்:- 613**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 20.11.2019 | **<u>பொருள் எண் 7</u>**<br>இந்நகராட்சிக்குட்பட்ட நகராட்சி புதிய அலுவலக கட்டிடத்தில் சுதந்திர தினத்தை முன்னிட்டு அலங்கார விளக்குகள் மற்றும் மைக் செட் மற்றும வாகன வாடகை உட்பட ரூ.4900/-க்கு அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் இப்பணிகளை உடனே செய்திட பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.வி.எழில்மாறன் அவர்களின் மூலம் செய்து முடித்திடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மன்றம்அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண்:- 614**<br>**அனுமதிக்கப்பட்டது** |

ஆணையர் / தனி அலுவலர்
கூத்தாநல்லூர் நகராட்சி

**<u>சாதாரண கூட்டம்</u>**

**கூத்தாநல்லூர் நகராட்சியின் 2019ம் ஆண்டு நவம்பர் மாதம் 29ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்**

| மன்றக்கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|
| 29.11.2019 | **<u>பொருள் எண் 1</u>**<br>நகராட்சி ஆணையர் (மு.கூ.பொ) அவர்களது அக்டோபர் 2019 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது<br>அலுவலக குறிப்பு :- பதிவு செய்யலாம் (ந.க.எண். 2105/2011/சி1) | **தீர்மானம் எண்:- 615**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 29.11.2019 | **<u>பொருள் எண் 2</u>**<br>நகராட்சி நகராட்சி பொறியாளர் அவர்களது அக்டோபர் 2019 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது<br>அலுவலக குறிப்பு :- பதிவு செய்யலாம் (ந.க.எண். 2105/2011/சி1) | **தீர்மானம் எண்:- 616**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 29.11.2019 | **<u>பொருள் எண் 3</u>**<br>இந்நகராட்சி பகுதியில் உள்ள குனுக்கடி வாய்க்கால், நேருஜி ரோடு வாய்க்கால், வள்ளுவர் காலனி வாய்க்கால் மற்றும் அப்துல் ரஹ்மான் ரோடு வாய்க்கால் போன்ற வாய்க்கால்களில் தற்போது ஆகாயத் தாமரைகள், கருவேல மரங்கள் நிறைய இருப்பதால் தண்ணீர் செல்ல முடியாமல் தேங்கி நிற்கிறது. தற்போது வடகிழக்கு பருவமழை பெய்து வருவதால் மேற்படி வாய்க்கால்கள் தண்ணீர் தேங்காமல் JCB இயந்திரம் கொண்டு சுத்தம் செய்யப்பட வேண்டும். எனவே மேற்படி வாய்க்கால்களை சுத்தம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.50,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண். 1899/2019/எச்1) | **தீர்மானம் எண்:- 617**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| 29.11.2019 | **<u>பொருள் எண் 4</u>**<br>நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் 04.01.2019 ஆம் தேதிய கடிதம் எண் 16914/2016/பி3ன்படி வீடுகளில் உருவாக்கும் அபாயகரமான கழிவுகளை தினசரி வீடுகளிலிருந்து பிரித்து பெறப்பட்ட தனியாக சேகரிக்கப்படும் மேற்படி கழிவுகளை சுகாதாரமான முறையில் முறையாக முற்றிலும் அழிக்கப்படவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இந்நகராட்சிப் பகுதியில் உள்ள வீடுகளில் இருந்து உருவாகும் அபாயகரமான கழிவுகளை அழிப்பதற்கு இயந்திர எரிதொட்டி (Incinerator) ஒன்று தேவைப்படுகிறது. மேற்படி இயந்திர எரிதொட்டி கழிவுகளை இயற்கை உரமாக்கும் குனுக்கடி உரக்கிடங்கில் (MCC Centre) ஒரு எண்ணம் ஒரு நாளைக்கு 100 கிலோ அபாயகரமான கழிவுகளை அழிக்கும் வகையில் அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,40,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண். 1029/2019/எச்1) | **தீர்மானம் எண்:- 618**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 29.11.2019 | **<u>பொருள் எண் 5</u>**<br>இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கி வந்த TN 50 AY 2779 என்ற டிப்பர் லாரி 24.08.2019 அன்று எரிந்து விட்ட காரணத்தினால் இந்நகராட்சி பகுதியில் உற்பத்தியாகும் மரக்கழிவுகள், கூரைக்கழிவுகள், தோட்ட கழிவுகள், வாய்க்காலிலிருந்து எடுக்கப்பட்ட மண்கள், மற்றும் மழைநீர் வடிகாலிலிருந்து அகற்றப்படும் மண்கள் ஆகியவற்றை அகற்ற முடியாமல் நகரில் பல பகுதிகளில் ஆங்காங்கே தேங்கியும் குவிந்தும் உள்ளது. எனவே மேற்படி கழிவுகளை உடனடியாக அகற்றப்பட் வேண்டி உள்ளதால் பொது சுகாதார அவசர அவசியம் கருதி ஒரு டிராக்டர் 15 தினங்களுக்கு தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் துறையில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள வாடகையில் அமர்த்திக் கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.50,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண். 1030/2019/எச்1) | **தீர்மானம் எண்:- 619**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| 29.11.2019 | **<u>பொருள் எண் 6</u>**<br>இந்நகராட்சி 2018-19 ஆம் ஆண்டு வருவாய் நிதி மற்றும் மூலதனநிதி கணக்குகள் மற்றும் குடிநீர் வடிகால் நிதி கணக்குகள் மீது வரவு செலவு திட்ட கணக்கு மற்றும் ஆண்டுக்கணக்குகள் தயார் செய்து உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அலுவலகத்திற்கு அனுப்பிட வேண்டியுள்ளதால், மேற்படி ஆண்டு கணக்குகள் தனியார் பட்டய கணக்கர் நிறுவனம் மூலம் தயார் செய்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ.45,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண். 2508/2019/பி1) | **தீர்மானம் எண்:- 620**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 29.11.2019 | **<u>பொருள் எண் 7</u>**<br>சிறப்பு அரசு வழக்குரைஞர் திரு.வி.ஜெயபிரகாஷ் நாராயணன் சென்னை உயர்நீதி மன்றம் அவர்களின் 27.11.2019ந் தேதிய கடிதத்தில் திருமதி.சர்னாஸ்பேகம் என்பவரால் தனது மகனின் தவறான பிறப்பு பதிவினை நீக்கம் செய்ய கோரி உயர்நீதி மன்றத்தில் W.P.No.32742/2019 என்ற எண்ணில் வழக்கு தொடர்ந்துள்ளார். எனவே மேற்படி வழக்கிற்கு வக்காலத்து மற்றும் கட்டணம் ரூ.15,000/-ம் உடனடியாக அனுப்பி வைக்குமாறு வழக்குரைஞர் கோரியுள்ளார். மேலும் மேற்படி வழக்கில் 27.11.2019 அன்று நடைபெற்ற வாய்தாவில் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு வழக்கு முடித்து வைக்கப்பட்டுள்ளது. அதற்கான வழக்குரைஞர் கட்டணத் தொகை ரூ.15,000/-த்தை வழக்குரைஞருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம் | **தீர்மானம் எண்:- 621**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| 29.11.2019 | **<u>பொருள் எண் 8</u>**<br>இந்நகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் வராமல் தடுக்கும் பொருட்டு 300 வீடுகளுக்கு ஒருவர் வீதம் 23 பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. தற்போது மேற்படி பணியாளர்களை கண்காணிக்கவும் டெங்கு காய்ச்சல் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தவும், முறையே வாராந்திர கணக்கெடுப்பு ஸ்டிக்கர் மற்றும் டெங்கு காய்ச்சல் விழிப்புணர்வு மல்டி கலர் நோட்டீஸ் ஆகியவை உடனடியாக தேவைப்படுகிறது. எனவே கூட்டுறவுத்துறையின் அரசாணை எண் 227 நாள் 10.03.1990 அரசாணையில் உள்ளாட்சி துறைகள் நேரடியாக கூட்டுறவு அங்காடியில் கொள்முதல் செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் திருநெல்வேலி மாவட்ட கூட்டுறவு மல்டிபர்போஸ் சர்வீஸ் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளி நாள் 23.10.2019ன்படி 4000 எண்ணிக்கை டெங்கு காய்ச்சல் பற்றிய வாராந்திர கணக்கெடுப்பு படிவமும், 4000 எண்ணிக்கை டெங்கு காய்ச்சல் பற்றிய விழிப்புணர்வு நோட்டீசும் மேற்படி கூட்டுறவு பண்டக சாலையிலிருந்து நேரடியாக கொள்முதல் செய்யவும் அதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.90,000/-க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண். 454/2019/எச்1) | **தீர்மானம் எண்:- 622**<br>**அனுமதிக்கப்பட்டது** |

ஆணையர் / தனி அலுவலர்
கூத்தாநல்லூர் நகராட்சி